மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம். அத்தகைபோர் 5 ஆண்டுகளுக்கு குறையாமல் பணி புரிந்திருந்தால் அவர்கள் 40 வயதுவரை தமிழ்நாடு தேர்வாணைக்குழுவின் மூலம் பட்டதாரி ஆசிரியர் மற்றும் முதல்தர தமிழ் ஆசிரியர்கள் பதவிகளுக்கும் நேரடித் தேர்வில் போட்டியிட அனுமதியளிக்கப்படுகிறார்கள்.

பி. ஓ. எல். பட்டப்படிப்பு

*268 வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

B.O.L. பட்டப்படிப்பை மறுபடியும் துவக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி: புலவர் படிப்பிற்கு டிப்ளமா என்றில்லாமல் பி.ஏ., எம்.ஏ. போல பட்டப்படிப்பாக மாற்றும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விவரம் இல்லை. பல்கலைக்கழகங்கள்தான் அதைப் பற்றி முடிவு செய்யவேண்டும். பி. ஓ. எல். பட்டத்தைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழகங்களில் ஏதாவது செயற் குறிப்பு இருக்கிறதா என்று கேட்கப்பட்டு சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

ஆழ்கடலில் மீன்பிடிப் பயிற்சி

*273. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மீனவர்களுக்கு ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கான பயிற்சி அளித்திடும் நிலையங்கள் எவற்றையேனும் தமிழ்நாடு அரசு நடத்திவருகின்றதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மீன் பதப்படுத்துவதற்கான நிலையங்கள்

* 274. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் கிடைக்கும் மீன்களைப் பதப்படுத்தி பக்குவப்படுத்தும் கருவிகள் அமைந்த நிலையம் ஒன்றை சென்னை யில் அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : கோளாவில் இருக்கிற கொச்சியில் இப்படிப்பட்ட பதனிடும் கூடங்கள் இருப்பதன் காரணமாகத்தான் அதிக அளவிற்கு வருவாய் வருகிறது. அதேபோன்று பதனிடும் நிலையங்களை இங்கும் அமைப்பதற்கு நம் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது மூன்று நிலையங்கள் அரசுச் சார்பில் இருக்கின்றன. தனிப்பட்டவர்கள் வேறு சில நிலையங்களை வைத்திருக்கிறார்கள். இதுவும் தவிர சென்னைத் துறைமுகத்தில் மீன்வளத் துறைமுகம் கட்டி முடித்த பிறகு இதுபோன்ற பல இயந்திரங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : இப்போதிருக்கிற மூன்று நிலையங்களில் எண்ணூரில் உள்ள நிலையம் இப்போது செயல்பட்டுக்கொண்டுவருகிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இலாகாவின் மூலம் செயல் பட்டுவருகிறது.

கிராம அதிகாரிகளுக்கு அகவிலைப்படி

*275 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டக் கிராம உத்தியோகஸ்தர்களிடமிருந்து தமிழ்நாட்டு என். ஜி. ஓ. க்களுக்கு அளிப்பது போன்ற கிராக்கிப்படி தங்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?